ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2487/38 - 2026 මැයි මස 08 වැනි සිකුරාදා - 2026.05.08

*2487/38 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மகியங்கனை ஆதார வைத்தியசாலையை மேம்படுத்தல் மற்றும் தரம் உயர்த்தல் நோக்கத்திற்காக மத்திய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சகத்திற்குக் கையகப்படுத்துதல்**

மகியங்கனையில் அமைந்துள்ள "A" வகை ஆதார வைத்தியசாலை, ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கிய இரண்டாம் நிலை சுகாதார சேவை நிறுவனம் ஆகும். இவ் வைத்தியசாலை தற்போது ஊவா மாகாண சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கடும் மழைப்பொழிவு மற்றும் “டிட்வா” புயலினால் ஏற்பட்ட பரவலான சேதம் உள்ளிட்ட தொடர்ச்சியான அபிவிருத்தி சவால்களை கருத்தில் கொண்டு, இவ்வைத்தியசாலையை மத்திய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சகத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர முன்மொழியப்பட்டுள்ளது.

2026, மாச்சு 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை தீர்மான இல. CP/26/0510/815/033 இன் படியும், ஊவா மாகாண ஆளுநரின் ஒப்புதலுடனும், மகியங்கனை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் தரம் உயர்த்தல் நோக்கத்திற்காக மத்திய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சகத்தால் கையகப்படுத்தப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அனைத்து உடைமைகளும் மற்றும் நிதி சொத்துகளும் உட்பட மகியங்கனை ஆதார வைத்தியசாலையை மத்திய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சகத்தின் கீழ் கொண்டு வர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இவ் வைத்தியசாலையில் தற்போது பணியாற்றி வரும் மற்றும் மத்திய அமைச்சகத்தில் இணைவதற்கு விருப்பமுள்ள பணியாளர்கள், அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மற்றும் பொது சேவை ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இணைத்துக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை கையகப்படுத்தும் செயல்முறை நிறைவடைந்த பின், வைத்தியசாலை வசதிகளின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் தரம் உயர்த்தலுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

**டாக்டர் அனில் ஜாசிங்க,**
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக
அமைச்சர்.

இல. 385, "சுவசிறிபாய",
வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2026, மே 01.

EOG 05 - 0045

1A - G 46744 - 28 (2026/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*